**O.S.No. 252/2013**

**DW1 :** திருஞானம் தேதி 23.3.2026

பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இவ்வழக்கை ஆண்டாள் (எ) கௌசல்யா பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்த போது என்னையும் சோமசுந்தரத்தையும் பிரதிவாதிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 26 மற்றும் 27 பிரதிவாதிகளாகிய எங்களுக்கு தாவா சி அட்டவணை சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்பதால் தான் எங்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இடை நிலை மனு எண். 765/2015 என்ற மனுவை நானும் சோமசுந்தரமும் எங்களை தரப்பினராக சேர்க்க கோரியதில் அம்மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சி அட்டவணை சொத்து ஆதியில் கே.பி நாராயணசாமிபிள்ளை அவர் சகோதரர் கே.பி.பாலகிருஷ்ணன்பிள்ளை மற்றும் அவர் சகோதரர் கே.பி.ராமானுஜபிள்ளை ஆகியோருக்கு குடும்ப சொத்தாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படியாருக்கு குடும்ப சொத்தில் தலா 1/3 பங்கு பாத்தியம் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)